Ontario
News Release
Communiqué
2006 ONTARIO BUDGET
BUDGET DE L'ONTARIO 2006
BUILDING OPPORTUNITY
CRÉER DES OCCASIONS DE RÉUSSIR

செய்தி வெளியீட்டுக்கு
மார்ச் 23, 2006

# உட்கட்டமைப்பு முதலீடுகள் ஊடாக மக்கின்ரி அரசாங்கத்தின் 2006 வரவுசெலவுத் திட்டம் வாய்ப்புக்களைக் கட்டியெழுப்புகிறது

### போக்குவரத்து, வீதிகள், பாலங்களில் 1.2 பில்லியன் டொலர் புதிய முதலீடு - 2005-06 பற்றாக்குறை 1.4 பில்லியன் டொலராகக் குறைப்பு

**Queen's Park** - மாகாணத்தின் போக்குவரத்து உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதனூடாகவும், கல்வி மற்றும் சுகாதாரத்தை தொடர்ந்து பலப்படுத்துவதனூடாகவும், நிதிப் பற்றாக்குறையை அகற்றுவதற்கான உரிய பாதையில் நகர்வதனூடாகவும் மக்கின்ரி அரசாங்கத்தின் மூன்றாவது வரவுசெலவுத் திட்டம் ஒன்ராறியோவின் பொருளாதார அனுகூலத்தைக் கட்டியெழுப்புகின்றது.

“எமது பொருளாதார வெற்றிக்கும் தரமான வாழ்கைக்கும் விரைவான, நம்பகரமான, பாதுகாப்பான போக்குவரத்து அவசியம்” என்று ஒன்ராறியோவின் நிதியமைச்சர் டுவைற் டங்கன் தெரிவித்தார். “ஒன்ராறியோவில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பைக் கட்டியெழுப்பக்கூடியதாக, வீதிகளிலும் பாலங்களிலும் பொதுப் போக்குவரத்திலும், புதிய பாரிய முதலீடு ஒன்றை அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன். எமது உட்கட்டமைப்புப் பற்றாக்குறையை கட்டி முடிப்பதனூடாகவும், சுகாதாரப் பராமரிப்பு, கல்வி என்பவற்றில் முன்னைய முதலீடுகளை வளம்படுத்துவதனூடாகவும், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதனூடாகவும், வேலை வாய்ப்புக்களையும் செல்வச் செழிப்பையும் உருவாக்குவதனூடாகவும் இந்த வரவுசெலவுத் திட்டம், வாய்ப்பைக் கட்டியெழுப்புகின்றது.

புதிய வரிகளோ அல்லது வரி அதிகரிப்புக்களோ அற்ற இந்த 2006 வரவுசெலவுத் திட்டமானது, 2003-04இல் பெறப்பட்ட 5.5 பில்லியன் டொலர் பற்றாக்குறையை 75 சதவீதமாகக் குறைக்கும் வகையில், 2005-06இல் அதனை 1.4 பில்லியன் இடைக்காலப் பற்றாக்குறையாக ஆக்குவதற்கு முயற்சிக்கின்றது. ஆகக் குறைந்தது 2008-09 அளவில், வரவுசெலவுத் திட்டத்தைச் சமப்படுத்தும் சாத்தியப்பாட்டை நோக்கி அரசாங்கம் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

ஒன்ராறியோ முன்னகர்வின் கீழ், பின்வருவன உட்பட ஒன்ராறியோவின் பொதுப் போக்குவரத்துத் தொகுதி, மற்றும் உள்ளூராட்சி வீதிகள், பாலங்களில் மக்கின்ரி அரசாங்கம் புதிய 1.2 பில்லியன் முதலீடு ஒன்றைச் செய்கின்றது:

- பிரதானமாக ரொறொன்ரோ பெரும்பாகத்துக்கு வெளியே - கிராமிய, வடபிரதேச சமூகங்களை முதன்மைப்படுத்தி, உள்ளூர் வீதிகள், பாலங்களுக்கென 400 மில்லியன் டொலர்;
- ரொறொன்ரோ மற்றும் யோர்க் பிராந்தியம், நெடுஞ்சாலை 7இல் உள்ள வாஹ்ன் கூட்டுறவு நிலையத்திற்கு, நிலக்கீழ்ப் புகையிரதப் பாதையை விரிவாக்கம் செய்ய 670 மில்லியன் டொலர்;
- Brampton AcceleRide செயல் திட்டத்தின் ஊடாகச் சிறப்பான பஸ் வீதி ஒழுங்கைகளை அமைக்கக்கூடிய வகையில், பிறம்ரனுக்கு 95 மில்லியன் டொலர்; மற்றும்
- 14 நிலையங்களுடன் கூடிய, ஒரு தனியான பாதையுரிமை கொண்ட Mississauga Transitwayயை உருவாக்கவென மிஸிஸாகாவுக்கு 65 மில்லியன் டொலர்;

“2005இல் மேலதிக வருமானம் தரும் வகையில், தனியார் துறை மற்றும் அரச திட்டங்களிலும் பார்க்க ஒன்ராறியோவின் பொருளாதாரம் சிறப்புடன் செயற்பட்டுள்ளது” என்று டங்கன் கூறினார். “எமது ஏககால வருமானத்தில் 60 சதவீதத்துக்கும் மேலான தொகையை போக்குவரத்து உட்கட்டமைப்பில் முதலீடு செய்யவெனத் தீர்மானித்துள்ளோம்.”

2009-10 ஆண்டளவில் பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வியின் பெறுகை, தரம், நம்பகத் தன்மை என்பவற்றை அதிகரிக்கும் வகையில், பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வியில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 6.2 பில்லியன் டொலர் முதலீட்டைக்கொண்ட, உச்சத்தை எட்டும் திட்டத்தை, கடைசி வரவுசெலவுத் திட்டத்தில் மக்கின்ரி அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த வருடத்துக்கான வரவுசெலவு முதலீடுகள் பல்கலைக்கழகக் கல்வியில் மேலும் பின்வருவனவற்றைச் செய்யும்:

- இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் வருமான வழிவகையை 35,000இலிருந்து 75,000 டொலராக இரட்டிப்பாக்குவதன் மூலம், நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களுக்கு கல்வி நிதியுதவி பெறுதலை அதிகரித்தல்;
- 2005-06இல் கல்வி நிதியுதவி பெற்ற 32,000 மாணவர்களது எண்ணிக்கையை 2006-07இல் 60,000 ஆக உயர்த்தி, இரு மடங்காக்குதல்;
- பூர்த்தி செய்யப்பட்ட ஓர் ஆண்டுக்கு மாணவர் கடனை 7,000 டொலராக கட்டுப்படுத்தி, இலகுபடுத்தல்;
- 1980களின் நடுப்பகுதிக்குப் பின்னர், முதற் தடவையாகப் புத்தகம் மற்றும் பாவனைப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளை உயர்த்தி, 138,000 மாணவர்களை நன்மை அடையச் செய்தல்;

2006 வரவுசெலவுத் திட்டமானது சுகாதார பராமரிப்பு, கல்வி, வினைத்திறன் பயிற்சி, ஆய்வு மற்றும் மாகாணத்தின் மிகவும் இலகுவாகப் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்பாளர்களில் தொடர்ந்து கணிசமான முதலீடுகளைச் செய்கின்றது. 2006 மக்கின்ரி வரவுசெலவுத் திட்டம் பின்வருவனவற்றைச் செய்கிறது:

- 2007-08 அளவில் குடும்ப சுகாதாரக் குழுக்களின் எண்ணிக்கையை 150 ஆக உயர்த்தல், காத்திருப்பு நேரங்களைக் குறைத்தல் என்பன உட்பட, 2006-07இல் மேலதிகமாக 1.9 பில்லியன் டொலர் முதலீடு;
- 2006-07இல் 12 மில்லியன் டொலர்- வகை 1 நீரிழிவைக்கொண்ட சுமார் 6,500 சிறுவர்களுக்கான இன்சுலின் செலுத்தி மற்றும் ஏனைய பாவனைப் பொருட்களை வழங்குவதற்கென 2008-09 அளவில் 30 மில்லியன் டொலராக இது அதிகரிக்கும்;
- 50 - 74 வயதுகளுக்கு இடைப்பட்ட பெண்களுக்கான மார்பு ஆய்வு விரிவாக்கம்;
- 2007-08 பாடசாலை வருடத்தில் மாணவர் தேவை நிதியுதவியை முன்னைய வருடத்திலிருந்து 400 மில்லியனுக்கும் அதிகமான தொகையினால், 17.3 பில்லியனுக்கு அதிகரிப்பு;
- வினைத்திறன் பயிற்சி, வேலை வாய்ப்புச் சேவைகளை விரிவாக்கும் பொருட்டு, 2.1 பில்லியன் டொலர் வேலைகள் மற்றும் வினைத்திறன் புதுப்பித்தல் உபாயத்தை உருவாக்குதல்;
- ஆய்வு, வர்த்தகமயப்படுத்தல், அரவணைப்புத் திட்டங்கள் என்பவற்றிற்காக ஐந்து வருடங்களில் சுமார் 1.7 பில்லியன் டொலர் முதலீடு; மற்றும்
- ஆபத்தில் இருக்கும் இளைஞர்களுக்கும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய வயதுவந்தவர்களுக்கும் குடும்பங்களுக்கும் உதவுவதற்கென 2006-07இல் மேலதிகமாக 218 மில்லியன் டொலர்.

"ஒவ்வொரு ஒன்ராறியோ குடியிருப்பாளருக்கும் வாய்ப்புக்களைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கம். ஒவ்வொரு ஒன்ராறியோவாசியும் வெற்றியடைவதற்கான வாய்ப்பைப் பெறவேண்டும் என நாம் விரும்புகின்றோம்" என்று டங்கன் கூறினார்.

ஒக்டோபர் 2003 தொடக்கம் ஏறக்குறைய 200,000 புதிய வேலைகளை நாம் ஒன்ராறியோவில் உருவாக்கினோம். முதலீட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, போட்டிக்குரிய வரி மற்றும் வர்த்தக சூழலைக் கடைப்பிடிப்பதே ஒன்ராறியோ பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஒரு முக்கிய உபாயமாகும். 2006 வரவுசெலவுத் திட்டம், மூலதன வரிவீதக் குறைப்பை விரைவாக்கத் தீர்மானித்துள்ளது. ஜனவரி 01, 2007 தொடக்கம் தற்போதய விகிதம் ஐந்து சதவீதத்தால் குறைக்கப்படும் - அதாவது தற்போது திட்டமிடப்பட்டதற்கு இரண்டு வருடம் முன்னதாக, அரசாங்கம் மாகாணத்தின் நிதிநிலைமை அனுமதிக்கும் பட்சத்தில், 2010இல் வரியை நீக்க எண்ணுகிறது.

"மக்கின்ரி அரசாங்கத்தின் திட்டம் பயனளிக்கின்றது" என்று டங்கன் கூறினார். "வேலைகள் அதிகரித்துள்ளன. நிதிப் பற்றாக்குறை குறைந்துள்ளது. வகுப்புகளில் மாணவர்களது எண்ணிக்கை சிறிதாகியுள்ளது. பிரதான சுகாதார நடைமுறைகளுக்கான காத்திருப்பு நேரங்கள் குறைந்துள்ளன. பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வி மென்மேலும் பெறக்கூடியதாகவும், கட்டுப்படியாகக்கூடியதாவும் உள்ளது.

சுகாதார பராமரிப்பு, கல்வி, மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றில் பிரதான முதலீடுகளைச் செய்வதனூடாக, தொடர்ந்து நாம் வாய்ப்புக்களைக் கட்டியெழுப்பி வரும் அதேவேளை, முன்னோக்கி நகர்ந்தவாறு, மாகாணத்தின் நிதியைக் கையாள்வதில் தொடர்ந்தும் நாம் கட்டுப்பாட்டுடனும் குறிக்கோளுடனும் இருப்போம்."

-30-

தொடர்புகளுக்கு:


Sean Hamilton
Minister's Office
*416-325-8679*
Tamil

Scott Blodgett
Ministry of Finance
*416-325-0324*


---